புதுச்சேரி அரசு

# திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை

மற்றும்

# மாநில அளவிலான வங்கிகளின் குழு

# பொது மக்களுக்கான அறிவிப்பு

புதுச்சேரி மாவட்டம், நேரடி வங்கிக் கணக்கு மூலம் பணம் பட்டுவாடா **(Direct Cash Transfer System)** முறையை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், 01.01.2013 முதல், மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு நலத்திட்டங்களுக்கான உதவித்தொகையை பயனாளி களின் வங்கி கணக்கின் மூலமாக நேரடியாக பட்டுவாடா செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதுவரை வங்கியில் கணக்கே இல்லாதவர்கள் தங்களின் குடியிருப்புக்கு அருகில் உள்ள வங்கி கிளையில் வங்கி கணக்கினை உடனடியாக தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. பயனாளிகள் தங்களது குடும்பத்தில் உள்ள நபர்களில் யாருக்கேனும் வங்கிக் கணக்கு இருக்கும் பட்சத்தில், அந்தக் கணக்கில் தங்களது பெயரை இணைக் கணக்காக **(Joint Account)** ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளி களாக இருப்பின், அவர்களுடைய உதவிகள் அனைத்தும் ஒரு வங்கி கணக்கின் மூலமே தரப்படும்.

பயனாளிகள் ஏற்கனவே வங்கியில் கணக்கு பெற்றிருக்கும் பட்சத்தில், அதற்கான விபரத்தினை சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடையில் 31.12.2012க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட விபரங்கள் 31.12.2012க்குள் முழுமையடையாத பட்சத்தில், அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உதவிகள் பயனாளிகளுக்கு அளிக்கப்படமாட்டாது என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

No.359/DIP/ADVT/2012